RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI:10.34256/irjt22414

OPEN ACCESS

# சங்க இலக்கியத்தில் விலங்குகளின் குடும்ப உணர்வு

**அ. மோகனா [அ, *], ரா. தேவணன் [அ]**

[அ] தமிழ்த்துறை, பெரியார் பல்கலைக்கழகம், சேலம்- 636011, தமிழ்நாடு, இந்தியா

# A Study of Animal's Family Relationship Feelings in the Sangam Literature

**A. Mohana [a, *], R. Devanan [a]**

[a] Department of Tamil, Periyar University, Salem-636011, Tamil Nadu, India

* Corresponding Author: monaparasu@gmail.com

Received: 05-05-2022
Revised: 22-08-2022
Accepted: 03-09-2022
Published: 08-10-2022

Check for updates

**ABSTRACT**

The feeling of family is not only for people. It can be found in many living things. In the early days, humans have gained the upper hand by understanding the activities of animals and birds and creating their biological structures. Family structure is found in such animals. In their family structure, food and security occupy a prime position. In this article, how the poet observed the life of animals in their environment and used their emotions in their songs. Among them there are family sentiments of monkey, bear, deer, elephant etc. They share their food, protect each other, and show their family spirit by raising their young safely.

**Keywords:** Family, Sangam Literature, Animals, Sentiment, Environment

## முன்னுரை

விலங்கில் இருந்து பரிணாம வளர்ச்சியில் தோன்றியவன் மனிதன். விலங்குகளிடம் கற்றுக்கொண்டு மக்கள் தங்கள் வாழ்வியலைக் கட்டமைக்கத் தொடங்கினான். அப்படிப்பட்ட விலங்குகளிடம் பல குணங்களும் உணர்வுகளும் காணப்படுகின்றன. அவற்றைச் சங்ககாலப் புலவர்கள் தங்களின் பாடல்களில் தேவையான இடங்களில் பயன்படுத்தியுள்ளனர். அவற்றில் விலங்குகளின் உணர்வுகளையும் உள்ளுறையாக, இறைச்சியாக, குறிப்புபொருளாகப் பதிவு செய்துள்ளார். அப்பதிவுகளில் காணப்படும் விலங்குகளின் குடும்ப உணர்வை வெளிப்படுத்துவது இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கமாகும்.

## குடும்பம் விளக்கம்

குடும்பம் என்பது இரத்த உறவு முறையைக் கொண்டு அமைகிறது. தாய், தந்தை, குழந்தைகள் என்ற அமைப்பில் காணப்படுகிறது. உயர்திணையாகிய மனிதனின் குடும்ப அமைப்பில் முன்னேற்றம் காணப்படுகிறது. கூட்டுக் குடும்பம், தனிக்குடும்பம் என்ற அடிப்படையில் இன்று வாழ்கின்றான். “குடும்பம் என்பது இயக்கமுள்ள கோட்பாட்டைக் குறிக்கின்றது. அது ஒருபோதும் இயங்காதிருப்பதில்லை. சமூகம் கீழ்நிலையிலிருந்து மேல்நிலைக்கு முன்னேறுகின்றபொழுது அதுவும் கீழான வடிவத்திலிருந்து மேலான வடிவத்துக்கு முன்னேறுகிறது” என்று எங்கெல்ஸ் கூறுகின்றார் (Engels, 2011). விலங்குகளும் குடும்ப அமைப்புடன் வாழ்கின்றன.

## ‘ஆ’க்களின் குடும்ப உணர்வு

பசுக்களைத் தற்காலத்தில் வீட்டு விலங்காக மட்டுமே பார்க்க முடிகிறது. எருமைகளில் காட்டு எருமை என்ற இனம் இருப்பது போல் ‘ஆ’ இனத்தில் தற்காலத்தில் இல்லை. ஆனால் பழங்காலத்தில் இருந்திருக்கக் கூடும் ஏனென்றால் தற்காலத்தில் ‘ஆ’ இனத்தில் ‘மலைமாடு ‘என்ற ஒரு இனம் உள்ளது.

“மண்ணுடைக் கோட்ட அண்ணல் ஏஎறு

உடனிலை வேட்கையின் மடநாடு தழிஇ

ஊர்வயின் பெயரும் பொழுதில் சேர்புடன்

கன்றுபழிர் குரல மன்றுநிறை புகுதரும்”

என்ற அகநானூற்று அடிகளில் ஏறுகள் பசுக்களுடன் மேய்ச்சலுக்குச் சென்று திரும்பும்போது கன்றுகளை நினைத்து அழைக்கின்றது (Venkatasamy Nattar, 2012). அச்செயலில் கன்றுகளிடம் பசுவும், ஏறும் வந்துவிட்டோம் என்ற செய்தியைக் கூறுவதாக உள்ளது. இது மாலை நேரம் வந்து விட்டது என்று தலைவன் தேர்பாகனிடம் உரைப்பதாக இருந்தாலும் பசுக்களின் குடும்ப உணர்வையும் எடுத்துரைக்கின்றது.

“யேறொடு

கன்றுடைய யாயந் தரீஇப் புகல்சிறந்து

புலவுவில் லிளைய ரங்கை விடுப்ப

மத்துக்கவி நாடா வைகற்பொழுது நினையுஉ

ஆண்பயம் வாழ்நர்..................................................”

இவ்வடிகளில் வீரர்களுக்குப் பரிசிலாகக் கொடுக்கும் ‘ஆ’ க்களைக் கூட ஆண், பெண், கன்று என்று குடும்பமாகக் கொடுத்துள்ளனர் (Avvai Duraisami Pillai, 1950).

## கரடியின் குடும்ப உணர்வு

கரடிகளும் குடும்ப அமைப்பைப் பின்பற்றி வாழ்ந்துள்ளன என்பதைச் சங்கப் பாடல்கள் பிறக்குகின்றன.

‘வான்புகு தலைய குன்றத்துக் கவாஅன்

பெருங்கை எண்கின் பேழ்வாய் ஏற்றை

இருள்துணிந்து தன்ன குவவுமயிர் குருளை

தோன்முலைப் பணவொடு திளைக்கும்

வேனில் நீடிய சுரன்இறந் தோரே’

என்ற அகநானூற்றுப் பாடலில் ஆண்கரடியும், பெண்கரடியும் குட்டிகளுடன் அன்பாகக் குடும்பம் நடத்துகின்றன (Venkatasamy Nattar, 2012). இங்கு கரடியின் குடும்ப உணர்வு தலைவனின் குடும்ப உணர்வைத் தூண்டும் விதமாக உள்ளது. அஃறிணை உயிரினங்களின் உணர்வுகள் உயர்திணை உயிரினங்களின் உணர்வை வெளிப்படுத்தப் பயன்பட்டுள்ளன.

## குரங்குகளின் குடும்ப உணர்வுகள்

குரங்குகளின் வாழ்வியலை மிகவும் நுட்பமாக உற்றுநோக்கி அவைகள் குடும்ப அமைப்பைக் கொண்டே வாழ்ந்துள்ளன என்பதை சங்கப்பாடல்கள் உணர்த்துகின்றன. “குரங்கின் குடும்ப

வாழ்க்கையைப் பற்றிச் சங்கப்புலவர்கள் சில செய்திகள் கூறியுள்ளனர். விலங்கு நூலார். குரங்குகள் ஆண், பெண்ணாக இணைவதையும் ஆனும் பெண்ணுமாக வாழ்வதையும் கூறியுள்ளனர். ஆனால் ஓர் ஆண் பல பெண் குரங்குகளைத் துணையாக வைத்திப்பதையும் கண்டுள்ளனர். குரங்கினத்தில் ஒருதார மணமும் பலதாரமணமும் நிலவுகின்றது" என்பர் (Sami, 1970). குரங்குகளின் குடும்ப அமைப்பைச் சங்க புலவர்கள் அறிந்து அவற்றைத் தம் பாடல்களில் குறிப்பிட்டுள்ளனர்.

குரங்குகளின் குடும்ப அமைப்பில் ஆண் இனமே தலைமை வகிக்கிறது. ஆனால் அவ்வினத்திற்குப் பொறுப்புகள் அதிகமாக உள்ளது.

"கொடியர் வாழி - தோழி! - கடுவுன்

ஊழுறு தீங்கனி உதிர்ப்பக் கீழிருந்து

ஏற்பன வேற்பன உண்ணும்

பார்புடை மந்திய மாலயிறந் தோரே"

இதில் ஆண்குரங்கு தன் குடும்பத்தின் உணவுத் தேவையை நிறைவு செய்யும் பொருட்டுக் கனிகளை உதிர்த்து விடுகின்றன (Nagarajan, 2007). அந்நிகழ்வைக் கண்ட பிறகும் தலைவனுக்குப் பொருப்புணர்வு வரவில்லையே, நான் எவ்வாறு ஆற்றியிருப்பேன் என்று தலைவி தோழியிடம் வினவுகிறாள்.

'கல்லாக் கடுவன் நடுங்க முள்ளெயிற்று

மடமா மந்தி மாணா வன்பறழ்

கோடுயர் அடுக்கத் தாடுமழை ஒளிக்கும்'

என்பதில் பெண்குரங்கும் குட்டிகளும் மறைந்துகொள்கின்றன. அவைகளைக் காணாமல் ஆண்குரங்கு பாசத்தால் தவிக்கின்றது (Ramasubramaniam, 2009).

'முடவுமுதிர் பலவின் குடமருள் பெரும்பழம்

பல்கிளைத் தலைவன் கல்லாக் கடுவன்

பாடிமிழ் அருவிப் பறை மருங்கின்

ஆடுமயில் முன்ன தாகக் கோடியர்

விழவுகொள் மூதூர் விறலி பின்றை

முழவன் போல அகப்படத் தழிஇ

இன்றுணைப் பயிருங் குன்ற நாடன்'

தன் இனத்தின் தலைவனாக இருந்தாலும் தான் சேகரித்துக் கொண்டுவரும் பொருளைத் தன் துணையான பெண் குரங்கிடமே கொடுக்கின்றது (Venkatasamy Nattar, 2012). இப்பண்பு இன்றும் மானுட குடும்பத்தில் நடப்பதைக் கண்கூடப் பார்க்க முடிகின்றது. மேலும் "குரங்குகள் குடும்ப அமைப்புடன் இருந்தது என்பதை ஐங்குறுநூற்றுப் பாடலும் கூறுகின்றது" (Puliyur Kesikan, 2009). குரங்குகளும் குடும்ப அமைப்புடன் வாழ்கின்றன. அவற்றிற்கும் குடும்ப பொருப்புகள் உள்ளன. அவை குடும்பத்தில் அன்புடன் வாழ்ந்துள்ளன என்பதைச் சங்க இலக்கியம் கூறுகின்றது.

## புலிகளின் குடும்ப உணர்வு

புலிகள் மனிதர்களுக்கு அச்சம் தரும் விலங்கு என்பதாலும் அவை மனிதர்கள் காணும்படி தன் வாழ்வை அமைத்துக்கொள்ளாதக் காரணத்தாலும் சங்கப்புலவர்கள் அவற்றின் குடும்ப அமைப்பை மிகுதியாகக் கூறவில்லை. சிலர் காண நேர்ந்ததை மட்டும் கூறியுள்ளனர். "பெண்புலி குட்டிகளை ஈன்று பசியுடன் இருப்பதை உணர்ந்த ஆண்புலி இரைதேடச் செல்கின்றது என்பது புலிகளின் குடும்ப

அமைப்பைக் காட்டுகின்றது" (Ramasubramaniam, 2009). பெருவாரியான புலிகள் ஒன்றை ஒன்று காண்பதைத் தவிர்க்கின்றன. இருப்பினும் ஆண் மற்றும் பெண் புலிகள் இரையை ஒன்றாகப் பகிர்ந்துகொள்வதற்கான சான்றுகள் உள்ளன. எடுத்துக்காட்டாக "ஒரு ஆண் புலியானது தான் கொன்ற இரையை இரண்டு பெண் புலிகள் மற்றும் நான்கு குட்டிகள் பகிர்வதை ஜார்ஜ் ஸ்கால்லெ பார்த்துள்ளார். பெண் புலிகள் பெரும்பாலும் ஆண்புலிகள் அதன் குட்டிகளின் அருகில் இருப்பதை விரும்புவதில்லை. ஆனால் ஸ்கால்லெர் இந்தப் பெண்புலிகள் தனது குட்டிகளை ஆண் புலிகளிடமிருந்து காப்பதற்காக எந்த முயற்சியும் எடுப்பதில்லை என்பதைக் கண்டு அது குட்டிகளுக்கு தந்தையாக இருக்கலாம் எனக் கருதுகின்றார்" என்று விக்கிப்பீடியாவில் கூறப்பட்டுள்ளது. புலிகளுக்குக் குடும்ப உணர்வு காணப்படுகிறது என்பதை அறிய முடிகிறது.

## மான்களின் குடும்பவுணர்வு

மான்களைக் காண்பதே ஓர் இனிமையான செயலாகும். மான்கள் குடும்பத்துடன் வாழ்வது இனிமையான காட்சியாகும்.

'தொடுதோற் கணவன் சுவைபொறுத் தன்ன

இருதிரி மருப்பின் அண்ணல் இரலை

செறியிலைப் பதவின் செங்கோல் மென்குரல்

மறியாடு மருங்கின் மடப்பிணை யருத்தித்

தெள்ளறல் தழிஇய வார்மணல் அடைகரை

மெல்கிடு கவுள துஞ்சுபுறங் காக்கும்

பெருந்தகைக் குடந்தை நெஞ்சம் ஏமுறச்'

என்ற அடிகளில் ஆண்மான், பெண் மான்களையும் குட்டிகளையும் பாதுகாக்கிறது. அதைத்தலைவன் பார்க்கும்பொழுது மான் தன் குடும்பத்தைக் காப்பது போல தானும் குடும்பததைக் காக்க வேண்டும் என்ற உணர்வு எழும் மானின் குடும்ப உணர்வு மானிடனின் குடும்ப உணர்வைத் தூண்டுகிறது. "கலைமான் குட்டிகளுடன் பெண்மானைத் தழுவி நிற்கும் காட்சியைக் கூறுகிறார் புலவர்" இந்த மானின் குடும்ப அன்பு தலைவிக்கு ஏக்கத்தை ஏற்படுத்துகிறது (Venkatasamy Nattar, 2012).

## யானைகளின் குடும்பவுணர்வு

யானைகள் களிறு, பிடி கன்று என்று உறவுடன் வாழ்கின்ற விலங்கு ஆகும்.

'வேட்டச் சீறூர் அகன்கட் கேணிப்

பயநிரைக் கெடுத்த மணிநீர்ப் புத்தர்

புன்றலை மடப்பிடி கன்றொ டார

வில்கடிந் தூட்டின பெயரும்

கொல்களிற் றொருத்தல சுரன் இறந் தோரே'

என்ற நற்றிணைப் பாடலில் யானைகள் குடிப்பதற்கு நீர் கிடைக்கவில்லை (Ramasubramaniam, 2009). வேட்டுவர் குடியிருக்கும் பகுதிக்கு அருகில் கிணற்றில் இருந்த நீரை ஆனிரைகளுக்காக வில் பொறியால் மூடி வைத்திருக்கின்றனர். அந்நீரைத் தன் இளம்பிடியும் கன்றும் அருந்தச் செய்கிறது களிறு"

"ஆண் யானை வேங்கை மரத்தின் பருத்த அடியை முறித்துக் கன்றுக்கும் பெண் யானைக்கும் உண்ணுமாறு ஊட்டுகின்றது" (Ramasubramaniam, 2009). "பெண்யானை முதல் கன்றை ஈன்று உணவு

கிடைக்காமல் வருந்தியதைக் கண்ட ஆண் யானை கானவர்கள் விளைவித்துள்ள திணையைக் கவர்கிறது. அதைக் கண்ட கானவர்கள் எரி கொள்ளியினை எறிகின்றனர் (Ramasubramaniam, 2009). இங்கு பெண் யானையின் பசியைப் போக்க ஆண் யானை படும் துன்பம் அவைகளின் குடும்பப் பாசப்பிணைப்பை வெளிப்படுத்துகின்றது. "பாலைநிலம் நாளுக்கு நாள் மிக வறண்டு கொண்டே செல்கிறது. அப்போது யானைக் குடும்பம் ஒன்று பசியால் வாடுகிறது. பசி துயர் தாங்காமல் வற்றிய குளத்தில் ஆண்யானை, கன்றையும் பெண் யானையின் சிறிய தலையையும் கழுவி ஆச்சாமரத்தடியில் நிற்கும்" (Ramasubramaniam, 2009). "கடுமையான கோடைகாலத்தில் பூமி வறண்டு போய்விடுவதால் தண்ணீருக்கு தட்டுப்பாடு ஏற்படும். அந்த நேரத்தில் தண்ணீரைத் தேடி வெகு தொலைவுக்கு அலையும் தன்மை யானைகளுக்கு உண்டு. நீர் நிலைகளைத் தேடிக் கண்டுபிடித்தாலும் பெண் யானைகளுக்கு முன்னுரிமை அளிக்கும். கடைசியில் தான் ஆண் யானைகள் நீரில் இறங்கி ஆனந்தக் குளியல் போடும்" என்கிறார் குன்றில் குமார் (Kunrilkumar, 2014). யானைக் குடும்பத்தில் பெண் யானைக்கும் குட்டிக்கும் முன்னுரிமை கொடுக்கும் மாண்பு காணப்படுகிறது. இச்செயல்பாட்டை அன்றே சங்கப் புலவர்கள் கண்டு உணர்ந்து பாடல் இயற்றியுள்ளார்கள்.

குழந்தைகளின் கொஞ்சல் விளையாட்டுகள் அனைவரையும் பேரின்பத்தில் ஆழ்த்தும் இந்த யானை குடும்பத்திலும் அவ்வாறே காணப்படுகிறது.

'புன்தலைப் புதல்வன் ஊர்பிழிந் தாங்குக்

கடுஞ்சூல் மடப்பிடி தழீஇய வெண்கோட்டு

இனஞ்சால் வேழங் கன்நூர்பு இழிதரப்

பள்ளி கொள்ளும் பணிச்சுரம் நீந்தி' (Venkatasamy Nattar, 2012)

என்ற பாடலில் யானைக் கூட்டத்தில் ஒரு குடும்பம் மடப்ப குணம் வாய்ந்த மனைவியோடு இருக்கும்போது அவர்களது குழந்தை விளையாடுவதுபோல இந்த யானைக் குடும்பத்திலும் ஆண் யானையும், பெண் யானையும் விளையாடும்போது அதன் மீது கன்று விளையாடும். அதனால் ஏற்படும் பேரானந்தத்தை அனுவித்த வாறே யானை உறங்கும்.

புலவர்கள் பரிசில் கேட்கும்போது கூட யானை குடும்பத்தையே கேட்கின்றனர் என்பதை,

'ஓடை நுதல வெல்குத லறியாத்

துடியடிக் குழவிய பிடியிடை மிடைந்த

வேடி முகவை நல்குமதி'

என்ற புறநானூற்றுப் பாடலடிகள் விளக்குகின்றன (Swaminatha Iyer, 2014).

'கன்றரைப் பட்ட கயந்தலை மடப்பிடி

வரிக்குவரம் பாகிய கவை னோம்பலி

னொண்கேழ் வயப்புலி பாய்ந்தெனக் கிளையொடு

நெடுவரை யியம்பு மிடியுமிழ் தழங்கு குரல்'

என்ற மலைபடுகடாம் அடிகளில் கருவுற்றுள்ள பெண் யானையை ஆண் யானை பாதுகாத்து வருகிறது என்பதை அறிய முடிகிறது (Mohan, 2004).

யானைகளின் குடும்ப அமைப்பில் ஆண் யானையே தன் குடும்பத்தின் மீது அதிக பாசம் கொண்டுள்ளது. உணவு, தண்ணீர் போன்ற அடிப்படை வாழ்வாதாரத் தேவைகளைத் தன் குடும்பத்திற்காக ஆண் யானை விட்டுக் கொடுக்கிறது. யானைக் குடும்பத்திற்கும் கூட்டத்திற்கும் பாதுகாப்பாக விளங்குவது ஆண் யானையே ஆகும்.

## முடிவுரை

சங்க இலக்கியங்களில் ஆ, கரடி, குரங்கு, புலி, மான் போன்ற உயிரினங்களின் குடும்ப உணர்வுகள் காணப்படுகின்றன. விலங்குகள் தன் குடும்பத்திற்கான நீர், உணவு போன்றவற்றை பகிர்ந்து கொடுத்து தனது குடும்ப உணர்வை வெளிப்படுத்துகின்றன. வீட்டு விலங்காக வளர்க்கப்படும் 'ஆ' க்களை குடும்பமாகவே வளர்த்துள்ளனர். சங்கப்புலவர்கள், வீட்டு விலங்குகளின் குடும்ப அமைப்பைவிடக் காட்டு விலங்குகளின் குடும்ப அமைப்பையே மிகையாகத் தங்களின் பாடல்களில் பதிவு செய்துள்ளனர். குரங்குக் குடும்பத்திலும், யானைக் குடும்பத்திலும் ஆண் இனத்திற்கு முதன்மை கொடுத்துப் பாடப்பட்டுள்ளது. விலங்குகளின் குடும்ப உணர்வு மக்களின் குடும்ப உணர்வைக் கூறுவதற்காகச் சங்கப்புலர்வகள் பயன்படுத்தியுள்ளனர்.

## References

Avvai Duraisami Pillai, (1950) Pathitrupathu, South India Saiva Siddhanta Works Publishing Society, Chennai, India

Engels, F. (2011) Kudumbam Thanochothu Arasu Agiyavatrin Thotram, New century Book house, Chennai, India

Kunrilkumar, (2014) Yaanaigal (Vaaranam Patriya Poorana Thagavalgal), Sentamil Pathippagam, Tirchy, India.

Mohan, R. (2004) Pathupattu, New Century Book House Pvt. Ltd, Chennai, India.

Nagarajan, V., (2007) Kurunthogai, Third Edition-, New Century Book House, Chennai, India.

Puliyur Kesikan, (2009) Ainkurunooru, Gowra Publications, Chennai, India

Ramasubramaniam, V.T. (2009) Natrinai (Moolamum Uraiyum), Thirumagal Nilayam, Tamil Nadu, India.

Sami, PL. (1970) Sanga Ilakiyathil Vilangina Vilakam, The South India Saiva Siddhanta Works Publishing Society, Chennai, India

Swaminatha Iyer, U.V., (2014), Purananooru Moolamum Uraiyum, U.Ve.Sa, Noolaga nilayam, Chennai, India.

Venkatasamy Nattar, Na.Mu. (2012) Agananooru Moolamum Uraiyum, Saratha Pathippagam, Chennai, India

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Authors 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License